## மாதிரி வினாத்தாள் 2 விடைக்குறிப்புகள்

### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 1 | (11) | 3 | (21) | 4 | (31) | 2 |
| (2) | 4 | (12) | 3 | (22) | 2 | (32) | 4 |
| (3) | 3 | (13) | 4 | (23) | 1 | (33) | 1 |
| (4) | 2 | (14) | 4 | (24) | 3 | (34) | 4 |
| (5) | 4 | (15) | 4 | (25) | 3 | (35) | 1 |
| (6) | 1 | (16) | 2 | (26) | 1 | (36) | 2 |
| (7) | 2 | (17) | 4 | (27) | 2 | (37) | 4 |
| (8) | 2 | (18) | 1 | (28) | 1 | (38) | 2 |
| (9) | 3 | (19) | 2 | (29) | 4 | (39) | 1 |
| (10) | 1 | (20) | 3 | (30) | 3 | (40) | 3 |

01)

i. நண்ணுற + பெறல் + திண்ணம் + அதாம் + என

ii. எழுவாய் - காளமேகம் பயனிலை - புறப்பட்டதே

iii. மகனே நீ வெயிலில் வராமல் தங்கையைப் பார்த்துக்கொள்

iv. “கொஞ்சம் இரு; எனக்கு ஞாபகத்தில் இல்லை,”

v. வளை - சங்குவளை (பெயர்)
வளை - வளைத்தான் (வினை) (பொருத்தமான வாக்கியம்)

vi. பின்வரும் வினாக்களுள் ஏவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக

vii. பாடசாலை மாணவர்களுக்காக ஆசிரியர்களால் நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

viii. தொலைந்து போனது கதிரவனா?, கதிரவனின் சட்டையா? என்பது மயக்கம்
திருத்தம் - “கதிரவனின் தொலைந்து போன சட்டையில் கறை படிந்திருந்தது”

ix. ஆனால்

x. உவமை அணி

02)

**அ) விளக்கக் கட்டுரை**

- மாதிரித் தலைப்புகள் - இலவசக் கல்வியை வலுப்படுத்துவோம், கல்வி அடிப்படை உரிமை
- கல்வியின் அவசியம் ‘கல்வியின்றேல் வாழ்க்கை இல்லை’ மற்றும் இலங்கையில் இலவசக் கல்வி பற்றிய விளக்கம்
- இலவசக்கல்வியைப் பெறுவதில் பின்னடைவு – குடும்ப வறுமை, தனியார் கல்வி, போட்டி, பரீட்சை மையம், புலமை குறைந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடு இல்லாமை
- இலவசக் கல்வியைப் பெறுவதில் தடைகள், குடும்பச் சூழல், நண்பர்கள் வட்டாரம், தொழில்நுட்ப சாதனப் பயன்பாடு
- அவ்வாறு ஏற்படும் குறைபாடுகளை நீக்குவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

**ஆ) உரையாடல்**

- தலைப்பு - இலத்திரனியல் சாதனங்களும் மாணவர்களும்
- உலகளவில் தொழில்நுட்பம் வளர்ச்சி, செல்லிடப்பேசி, கணினி பாவனை அதிகரிப்பு
- இது மாணவரிடத்தும் அதிகரித்துக் காணப்படுகின்றது.
- விரைவான தகவல் பரிமாற்றம் இதனால் மாணவர்களுக்கு பல்வேறு பயன்கள் உண்டு.
- செல்லிடப்பேசி, கணினி போன்றவற்றின் தீமைகள்
- இவற்றைச் சரியான வழியில் பயன்படுத்தி பயனடைய வேண்டும்.

**இ) மேடைப்பேச்சு**

- தலைப்பு - வெளிநாட்டு மோகம் - இன்றைய இளைஞர்களின் வெளிநாட்டு மோகம்
- வெளிநாடுகளில் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது, சுத்தமான சூழல், பாதுகாப்பான சமூகம் ஆகியவை இளைஞர்களை ஈர்க்கின்றன.
- உள்ளூரில் பெறும் மாதச் சம்பளத்தைவிட வெளிநாடுகளில் அதிக வருமானம் கிடைத்தல்
- சமூக அந்தஸ்து - வெளிநாட்டிலிருந்து வந்தவர் எனும் சமூக மரியாதை, புகழ்பெறும் ஆசை
- உயர்கல்வி வாய்ப்புகள், வேலைவாய்ப்புக்கள்
- சமூக வலைத்தளங்கள், சினிமா போன்றவற்றில் வெளிநாட்டு ஆடம்பர வாழ்க்கையைப் பார்த்து அவர்களைப் போல வாழ வேண்டும் என்ற எண்ணம்.
- பாதக நிலமைகள் - சொந்த ஊர், உறவுகளைப் பிரிதல், உணவு ஒவ்வாமை, காலநிலைத் தாக்கங்கள், தனிமை உணர்வு, மனஅழுத்தம்

**ஈ) சிறுகதை**

- தலைப்பு – என்று தீருமோ?, பெண்ணாய்ப் பிறந்துவிட்டால்
- சிறுகதை அமைப்பு பின்பற்றப்படல்
- கருப்பொருளுக்கு ஏற்ப கதை நகர்த்தல்
- சுவைபடவும் விறுவிறுப்பாகவும் கூறல்
- பொருத்தமான மொழிநடையைப் பயன்படுத்தல்
- பொருத்தமான முடிவு.

**03) சுருக்கம்**

- வளமுடைய நிடத நாட்டை ஆட்சி செய்தவன் நளன்
- ஆட்சித் திறத்தினால் மன்னர்களுள் சிறந்து விளங்கினான்.
- நளன் கலியின் வஞ்சனைக்குள்ளானான்
- புட்கரன் என்பவனோடு சூதாடினான்
- சூதில் தோற்று தன் நாட்டையும், மக்களையும், செல்வத்தையும் இழந்து காட்டிற்குச் சென்றான்.
- நளன் காட்டிற்குச் சென்றதும் புட்கரன் நிடத நாட்டின் ஆட்சிக்கு வந்தான்.

**04) உரைநடை (கிரகித்தல்)**

i. கல்வியைத் தொடங்குவதற்கு ஐந்து வயதுப் பிள்ளைக்கு முதிர்ச்சி போதாது என்பது உளவியல் நிபுணர்களின் கருத்தாகும்.

ii. ஏழு வயது

iii. ஜே.ஜே. ரூஸோ, ஜே. பியாஜே

iv. இயலும்வரை பிள்ளைகளின் மனதுக்கு வேலை கொடாமல் பேணுங்கள் என்று வலியுறுத்துகின்றார்.

v. அ) உளவியல் - மனோதத்துவம் ஆ) நிபுணர் - தேர்ச்சி பெற்றவர்

**05) கடிதம்**

- அமைப்பு - 05 புள்ளிகள்
  - முகவரி - 01 புள்ளி
  - உள்முகவரி - 01 புள்ளி
  - விளிப்பு - 01 புள்ளி
  - தலைப்பு - 01 புள்ளி
  - பதவி, ஒப்பம் - 01 புள்ளி

  உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
  மொழிநடை - 03 புள்ளிகள்

- தலைப்பு - குடிநீர் வசதி ஏற்படுத்துவது தொடர்பாக....
- உள்ளடக்கம்
  - ✓ அம்பாள்புரம் கிராமத்தின் நிலை
  - ✓ நீரைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள்
  - ✓ நீரைப் பெற மக்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலை
  - ✓ நீர்த் தட்டுப்பாட்டால் சிறுநீரகப் பிரச்சினை, உடல்வரட்சி, செரிமானப் பிரச்சினை ஏற்படல்
  - ✓ தவிசாளருக்கு தெரியப்படுத்தல்
  - ✓ தீர்வு - நீர்த்தாங்கிகளை வைத்து நீரைப் பெற வழிசெய்தல்

**05) துண்டுப்பிரசுரம்**

- அமைப்பு - 05 புள்ளிகள்
  - கவர்ச்சிரமான தலைப்பு - 02 புள்ளிகள்
  - விளிப்பு - 01 புள்ளி
  - வெளியிடுவோர் பற்றிய விபரமும் திகதியும் - 02 புள்ளிகள்
- உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
- மொழிநடை - 03 புள்ளிகள்
- உள்ளடக்கம்
  1. போதைப்பொருள் பாவனையின் தீமைகள்
     - ✓ உடல்நலத்தில் மனநலத்தில் பாதிப்பை ஏற்படுத்துவது
     - ✓ குடும்ப உறவுகள் முறிவடைகிறது
     - ✓ கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை இழக்கச் செய்கிறது
     - ✓ சமூகத்தில் அநாதரவாக மாற்றுகிறது.
     - ✓ பண இழப்பு, பணத்திற்காக களவு, கொள்ளை, கொலை
  2. எதிர்கால சந்ததியினரிடையே ஏற்படுத்தும் தாக்கம்
  3. போதைப்பொருளைத் தடுக்கும் வழிவகைகள்
     - ✓ கல்வி மற்றும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்
     - ✓ குடும்பக் கட்டமைப்பை வலுப்படுத்தல்
     - ✓ சட்டத் தன்மை மற்றும் கண்காணிப்புகளை மேற்கொள்ளல்
     - ✓ ஆன்ம, தியானப் பயிற்சி மற்றும் சுயமுனைப்பை ஊக்குவித்தல், பொழுதுபொக்கு
     - ✓ மருத்துவமனைகள் மற்றும் ஆலோசனை மையங்கள் உருவாக்குதல்
- மொழிநடை
  - ✓ கவர்ச்சிரமான மொழிநடை
  - ✓ பொதுமக்களை, மாணவர்களை விழித்து எழுதுதல்
  - ✓ சொற்செறிவு

## பகுதி -111 இற்கான விடைகள்,

*01.*

i. அ) முழக்கமிடுகின்ற அலைகள்
ஆ) பெண்கள் விளையாடுகின்ற கழங்கு விளையாட்டு

ii. அ) உண்மை
ஆ) வீரகவிராசர்

iii. அ) தேவர்கள்
ஆ) கிருஷ்ணன்

iv. அ) உருவக அணி
ஆ) சுவாமி விபுலாநந்தர்

v. அ) அரவிந்தன்
ஆ) கதாசிரியரை

vi. அ) நாவலர்
ஆ) பிறிற்றோ கட்சி வெற்றிபெறும் தருவாயில் இருந்தபோது

vii. அ) பேதை எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு ஒருமைச் செயலாற்றும்
ஆ) ஏழுபிறவியிலும் வருந்தும் துன்பத்தை ஒரு பிறவியிலேயே உருவாக்கிக்கொள்வான்

viii. அ) நெருங்கியது அல்லது அடைந்தது
ஆ) உவமையணியைப் பயன்படுத்தி – அன்னப்பறவை சிறகின்றி வந்ததுபோல

ix. அ) அன்பு, அருள், அறம்
ஆ) இன்பம்

x. அ) வீரமில்லாதவர்கள்
ஆ) பெண்கள்/கோதையர்

2.

*1.* அ) சந்திரனை தலையிலே சூடியவர், தென்னாரிய நாட்டில் உறைபவர்.
ஆ) எருமை மாடுகள் கூட்டம் கூட்டமாக இறங்குகின்ற நீர்த்துறையில்

*2.* அ) சுமித்திரை
ஆ) நெறியில் நின்று நீங்காத தன் வாய்மையை நிலைத்து நிற்கச் செய்து..

*3.* அ) விளங்குகின்ற நீதிநூல்களை கற்றறிந்த அறிவுடைய பெரியோர்கள்
ஆ) விலங்கு போன்று பலவற்றிலும் ஆசைப்படும் எண்ணம்

*4.* அ) கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்கள், பழக்கவழக்கங்கள், தொழில்முயற்சிகள், நம்பிக்கைகள்
ஆ) கிராமப்புற மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையில் நிகழும் எல்லா அம்சங்களும்

*5.* அ) அகத்தணைக்குள் அடங்காத அனைத்தும் புறத்திணை எனப்படும்.
ஆ) தமிழ் நாட்டினை ஆட்சிசெய்த மன்னர்களின் வீரம், ஆட்சித்திறன், கொடைச்சிறப்பு, போர், தோற்றப் பொலிவு மற்றும் சங்கப்புலவர்களின் நற்குணங்கள்

3. அ) ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்
தனக்குப் பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசை கொள்ளுதல் *(1, 2 குறள்கள்)*

ஆ) பேதையின் நட்பானது மிகவும் இனிமையானது. ஏனெனில் பிரியும் போது துன்பம் தராது. *(குறள் 9)*

இ) பேதையரிடம் பொருள் கிடைத்தால் பைத்தியகாரன் மது குடித்து மயங்கியதற்கு போன்றது
அறிஞர் சபையுள் பேதை புகுவது அழுக்கை மிதித்து, கழுவாத காலை படுக்கையில் வைப்பது போன்றது *(8, 10 குறள்கள்)* *(15 புள்ளிகள்)*

**அல்லது**

அ) உருவம், அறிவு எனும் விடயங்கள் ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளன.
உருவத்தில் சிறியதற்கு ஆலம் விதையும் உருவில் பெரியதற்கு பனை விதையும் கூறப்பட்டுள்ளது.
பனைமரம் ஒருவருக்கு நிழல் தராது
உருவில் சிறிய ஆலம் விதையிலிருந்து வரும் ஆலமரம் நாற்படைகளுக்கும் நிழல் தரும்
உருவத்தை வைத்து ஒருவரின் அறிவை வரையறுக்க முடியாது

ஆ) அடக்கமுடையவர்கள் தமக்கு ஏற்ற காலம் வரும்வரை பொறுமையுடன் இருப்பார்கள்
ஔவையார் கொக்கு எனும் பறவையை இதற்கு உதாரணமாகக் கூறியுள்ளார்
நீரோடும் வாய்க்காலில் வரும் சிறிய மீன்களையெல்லாம் ஓடவிட்டுத் தனது உணவுக்கு ஏற்ற மீன் வரும்வரை கொக்குக் காத்திருப்பது கூறப்பட்டுள்ளது.

4. அ) தேவர்களை அழைத்தல் - விருந்தோம்பல்
பெண்கள் சிற்றில் செய்து விளையாடுதல்.
கிழங்கும் தேனும் எடுத்தல், வறுத்த தினை இடித்தல்.
யானைகளை வேட்டையாடுதல், பாடி நடனமாடுதல்
திருக்குற்றால நாதரை வழிபடுதல்.

ஆ) **உயர்வு நவிற்சி அணி**
தேனருவியின் திரை மேலெழுந்து வானின் வழி ஒழுகுதல்
குதிரை பூட்டிய தேரிலே வந்த சூரியன் அந்நீரில் வழுக்குதல்.
தேன் பெருகியிருக்கும் செண்பக மலர்களின் வாசமோ வானுலகிலும் சென்று பரவுதல்
**உவமை அணி**
நீர்வீழ்ச்சியானது தானும் கழங்காடுவது போல முத்துக்களைச் சொரிந்து கொண்டிருத்தல்.
வரும் விருந்தினருக்கு உபசரிப்பது போல சோறிடல்

**அல்லது**

அ) தலைவனைப் பிரிந்திருந்தாலும் இன்பமாக இருக்கின்றாள்.
அவளது கரங்களில் அணிந்திருந்த கைவளையல்கள் இறுக்கமுற அமைந்திருந்தன.
தலைவன் இல்லாத போதும் அத் தலைவன் மீது தலைவி கொண்ட காதலை தன் உள்ளத்தே பெருகச் செய்து தலைவி இன்பமடைந்திருந்தாள்

இதனை உவமை அணி மூலம் கூறியுள்ளார். – சிறுதேரில் ஏறிச் செலுத்தி இன்பம் பெறாவிடினும் கையில் இழுத்து இன்பமடையும் சிறுகுழந்தைகள் போல

ஆ) செறிந்த மணலினால் செய்யப்பட்ட வண்டல் பாவைக்கு பூக்களைப் பறித்துச் சூட்டி மகளிரோடு கைகோர்த்து தழுவி, அசைந்து வஞ்சனையற்ற இளம் மைந்தர் கூட்டத்தோடு சேர்ந்து விளையாடுதல்.
உயர்ந்த கிளைகளையுடைய மருதமரத்தில் ஏறி, நீர்க்குட்டத்திலே "துடும்" எனப் பாய்ந்து, குளித்து விளையாடுதல், மணலினை எடுத்து வந்து காட்டுதல்

5. அ) போர் செய்தால் இருதிறத்தோரும் மாய்வர்.
உறவினர்கள், குருமார்கள், சகோதரர்கள் என்போரைக் கொன்று போரில் வென்று அரசாட்சியைப் பெறுவதைவிட காட்டிற்குச் செல்வது நல்லது.
கிருட்டிணன் தூதாகச் சென்று முதலில் பாகத்தைக் கேள் அதைமறுத்தால் ஐந்து கிராமங்கள், ஐந்து வீடுகள் என்பவற்றைக் கேட்டல்
குற்றத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் உறவு என யாரும் இருக்கமாட்டார்கள்
ஒற்றுமையாக வாழும் வாழ்வைப் போல் உறுதியுண்டோ?
அவமானம் என்பது பிறரால் ஏற்படுவது அன்றி உறவினர்களால் ஏற்படுவதல்ல.

ஆ) தருமன் கூறியதைக் கேட்டு, வாயிலிருந்து வருகின்ற வார்த்தைகள் தடுமாறும்படி விரைவாக எழுதல்
தருமன் தம் மரபுக்கும் தமக்கும் பழியை ஏற்படுத்திவிட்டதாகக் கோபம் கொள்ளல்
துரியோதனன் வெறுக்காத வகையில் அவன் ஆட்சி செய்யும் நிலத்தைப் பெற்றுத் தருவேன் எனக்கூறுதல்
துரியோதனன் முதலானோருக்குத் தேவர்களின் இந்திரலோகத்தைப் பரிசாக அளிப்பேன் எனக் கூறுதல்.
போர்க்களத்தில் அணிவகுத்து வரும் துரியோதனனதும் அவனுக்கு சார்பாக வருவோரின் உடல்களை துண்டாகும்படி போர் செய்வேன் என்று கூறுதல்
பாஞ்சாலியின் சபதமும் என் சபதமும் வழுவாத வகையில் தவறுகிற மொழியை உடைய துரியோதனனிடம் தூதாக தன்னை அனுப்பும்படி கேட்டல்

6. அ) சுதந்திரத்திற்காக போராடுபவர்களை கொல்லும் நோக்கத்தோடு படைவீரர் காத்திருக்கும் செயலைக் கூறுதல்
நாட்டின் சுதந்திரத்தை நற்பயிர் எனக் கூறல் அதை வீழ்ந்திடச் செய்ய சில மன்னர்கள் விரும்புகின்றனர் எனல்
நாட்டைக் காப்பவர்களை தேசபக்தர்கள் எனக் கூறல்

ஆ) ஐம்புலங்களும், கரணமும், ஆவியும் ஒன்றுசேர்ந்த விருப்புடன் முயற்சித்தல்
விலங்குக் குணத்தை இல்லாதொழித்தல்
ஆழ்மனதில் எண்ணம் உறுதியாக இருத்தல்

7. அ) வேட்டுவத் தலைவன் என்ற போதும் குகனையும் மகனாக ஏற்றமை, புதல்வர்களே கானகத்தே இவருக்கு துணையாக இருந்தனர் என்று விளித்துப்பேசியமை.

இராமனும் இலக்குமணனும் கானகம் நோக்கிப் பெயர்ந்தமையால் குகன் என்ற ஒரு துணைவனை பெறும் வாய்ப்புக் கிட்டியது நன்மை எனக் கூறியமை

குகனின் தோற்றத்தையும் வீரத்தையும் பாராட்டிப் பேசுகின்றமை.

குகனுடன் பரதனையும் சத்துருக்கனையும் இராமலக்குவர்களையும் இணைத்து "நீங்கள் ஐவீரும்…" என வாழ்த்துரை வழங்கியமை.

ஆ) தருமமே என்று சொல்லத்தக்கவள், அன்பினால் நிறைந்தவள்

தசரதனின் இளந்தேவி, இலக்குவனைப் பெற்ற பெரியவள்

(10 புள்ளிகள்)